CC.82/2021

PW-1, வீரணன்

( 1வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஊராட்சிமன்ற தலைவருக்கு குறிப்பிட்ட பணிநேரம் வரன்முறை கிடையாது என்று சொன்னால் சரிதான். தண்ணீர் வரவில்லை சம்பந்தமாக பொதுமக்கள் யாரும் புகார் செய்தார்களா என்றால் செய்தார்கள். மோட்டார் மூலம் தண்ணீர் திருடியது சம்பந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடவடிக்கை எடுக்கப்பட்டது சம்பந்தமாக எதாவது ஆவணம் போலிசாரிடம் சமர்பித்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் 1வது எதிரி முன்பு எனக்கு எதிராக பஞ்சாயத்துதேர்தலில் தலைவர் பதவிக்கு நின்றார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி பஞ்சாயத்து தேர்தலில் எனக்கு எதிராக நின்றதால் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்று நான் பஞ்சாயத்து கூட்டம் முடித்து உடனடியாக வெளியே செல்லவேண்டியிருந்தது அதனால் மறுநாள் கொடுத்தேன். நான் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை